செ.வெ.எண்: 459 **செய்தி வெளியீடு** நாள்: 18.7.11

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (18.7.2011) தலைமைச் செயலகத்தில், சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் 65–வது கிளையினை காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) திறந்து வைத்தார்கள்.

சென்னை மத்திய கூட்டுறவு வங்கி, சென்னை மாநகரில் 1930–ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் சிறந்த வங்கியாக கடந்த 80 ஆண்டுகளுக்கு மேலாக இவ்வங்கி செயல்பட்டு வருகின்றது. இவ்வங்கியின் பங்கு மூலதனம் 31.3.2011 அன்று தமிழக அரசின் பங்கு 7 லட்சம் ரூபாயுடன் சேர்த்து 153 கோடியே 22 லட்சம் ரூபாய் ஆகும். இவ்வங்கியின் மொத்த உறுப்பினர் சங்கங்களின் எண்ணிக்கை 500 ஆகும்.

இவ்வாண்டு (2011) மே மாதம் வரை பொது மக்களிடமிருந்து பெற்ற வைப்புத் தொகை (Deposits) 1,729 கோடியே 6 லட்சம் ரூபாய் ஆகும். தற்போது வங்கியின் நடைமுறை மூலதனம் 2,325 கோடியே 27 லட்சம் ரூபாயை எட்டியுள்ளது. மேலும், பொது மக்களுக்கு நகைக் கடன், வீட்டு அடமானக் கடன், வீடு கட்டும் கடன், அரசு நலத் திட்டக் கடன்கள், சுய உதவிக் குழுக்களுக்கான கடன், பணியாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கான கடன் மற்றும் பொது விநியோகத் திட்டம் செயல்படுத்த கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவையான கடன் என பல்வேறு கடன்களை வழங்கி, வங்கியின் கடன் நிலுவை 1,769 கோடியே 89 லட்சம் ரூபாய் அளவிற்கு உள்ளது. இந்த வங்கி வழங்கியுள்ள கடனில் வசூலின் அளவு 98.80 விழுக்காடு அளவிற்கு உள்ளது. இவ்வங்கி தொடர்ந்து லாபத்தில் செயல்பட்டு வருகிறது.

459

சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி சென்னை மாநகர எல்லைக்குள் 64 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. இவ்வங்கியின் தலைமையகம் மற்றும் அனைத்து கிளைகளும் கணினி மயமாக்கப்பட்டுள்ளதுடன், இந்த நிதியாண்டு (2011–2012) முதல் மைய வங்கியியல் தீர்வு (Core Banking Solutions) சேவையை புதிதாக அறிமுகப்படுத்த உள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில், சென்னை, அண்ணாநகர் தொகுதிக்குட்பட்ட எம்.எம்.டி.ஏ. காலனியில் இவ்வங்கியின் 65–வது கிளையினை காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) திறந்து வைத்து, இவ்வங்கி மக்கள் சேவையில் சிறப்பாக செயல்பட தனது நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்கள். மேலும், வங்கி அலுவலர்கள் சிறப்பாக பணிபுரிந்து பொதுமக்களுக்கு நற்சேவை புரிந்திட அறிவுரை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர், சென்னை மத்திய கூட்டுறவு வங்கியின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள் : 18.7.2011